நத்தார் - புதுவருட
வாழ்த்து மடல்கள்
தொகையாகவும்
சில்லறையாகவும்
விற்பனைக்கு உண்டு
ரஞ்சித்
இல 16, 44,
மாட்டின் லேன்,
மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வர்த்தக, விளம்பர
நாட்காட்டி முகவரிகள்
அச்சிட்டுத் தரப்படும்
தொடர்பு:
ரஞ்சித்
இல. 16, 44,
மாட்டின் லேன்,
மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 19 சனிக்கிழமை (04 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 08

## சூறாவளி இன்று காலை குடாநாட்டைக் கடக்கலாம்

### சென்னையிலும் அபாய எச்சரிக்கை

கொழும்பு, டிச. 4
வேகமான சூறாவளி யாழ்ப்பாணக் குடாநாட்டை இன்று காலை கடந்து செல்லும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

சூறாவளியினால் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும் என்பதால் முன் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டிலும் புயல் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வங்கக்கடலில் உருவாகி இருக்கும் புயல் காற்று இன்று பிற்பகல் அதிராம் பட்டினத்துக்கும் சென்னைக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னையில் உள்ள புயல் எச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை எட்டரை மணிக்கு நாகபட்டினத்துக்குத் தென்கிழக்கே 400 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டிருந்த புயற்காற்று தீவிரமடைந்து கடுமையான புயற்காற்றாக மாறி மேற்கு மற்றும் வட மேற்குத் திசையில் நகரக் கூடும் என்று நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.

சென்னை, செங்கை— எம். ஜி. ஆர், தென் ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களிலும் பாண்டிச் சேரியிலும் புயல் கரையைக் கடக்கும் போது கடலரிப்பு ஏற்படுவதோடு, ஒன்றரை மீற்றர் உயரத்துக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மூர்ச்சந்தி முரளி



எங்கட மண்ணில சூறாவளி கூட தோற்றுப் போகும் பாருங்கோ!

## முஸ்லிம்கள் - பொலீஸார் கொழும்பில் நேற்று மோதல்

கொழும்பு, டிச. 4
பொலீஸ் நிலையத்தைத் தாக்கிய முஸ்லிம் கும்பல் ஒன்றைக் கலைப்பதற்காக பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பாவித்த சம்பவம் நேற்று கொழும்பு வாழைத் தோட்டத்தில் இடம் பெற்றது.

நேற்று ஜும் ஆத் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியே வந்த முஸ்லிம்கள் ஒன்று திரண்டு வாழைத் தோட்டம் பொலீஸ் நிலையம் மீது கற்களை வீசினர் என்றும் இவர்களைக் கலைப்பதற்காக பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பாவித்தனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது இரு பொலீஸ் அதிகாரிகளும் முஸ்லிம்கள் சிலரும் காயம் அடைந்தனர்.

முஸ்லிம் ஒருவருக்கும் சிங்களவர் ஒருவருக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட பிணக்கே பொலீஸ் நிலையம் தாக்கப்படும் அளவுக்கு மோதலாக வெடித்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து நேற்று பிற்பகல் புறக்கோட்டையிலும் வாழைத் தோட்டத்திலும்பல கடைகள் மூடப்பட்டன.

அசம்பாவிதங்களைத் தடுப்பதற்காக கலகம் அடக்கும் பொலீஸார் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.
(இ-6)

# அரசியல் தீர்வு ஒன்றை காணுமாறு பிரதமரிடம் அரச அதிபர் வலியுறுத்து

## விமானத் தாக்குதல் பற்றிய விவரங்களையும் சமர்ப்பித்தார்

கொழும்பு, டிசம்பர் 4
வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு, யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்காவிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அரச அதிபர் பிரதமர் ரணிலை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, பூநகரித் தாக்குதலைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகள், பாதிப்புகள் சம்பந்தமான விவரங்களையும் சமர்ப்பித்தார்.

இந்தத் தகவல்களை பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் திரு. மாணிக்கவாசகர் வெளியிட்டார்.

தமிழோசையைச் சேர்ந்த ஆனந்தி, அரசாங்க அதிபரை தொலைபேசி மூலம் நேற்று செவ்வி கண்டார்.

அந்தச் செவ்வியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

கேள்வி: நீங்கள் ஓர் அரச அதிகாரி. போர் என்ற சூழ் நிலையில் நிலைமையை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

பதில்: பூநகரிச் சண்டை நடக்கும்போது இங்கேயும் (யாழ்ப்பாணத்தில்) ஒரே கஷ்டம்தான் ஊரடங்கு ஒருபுறம்.

கே: இக்கஷ்ட சூழ்நிலையில் மக்களின் உணர்வலைகள் என்ன? எப்படி இக்கஷ்டங்களுக்கு எல்லாம் அவர்கள் ஈடுகொடுக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

ப: மக்களுக்குச் சரியான

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் படையினர் பதுங்கி இருந்து தாக்குதல்

### தமிழர் ஒருவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், டிச. 4
நெடுங்கேணியில் உள்ள கற்குளம் சந்தியில் வைத்து நேற்று முன் தினம் மாலை 5.30 மணியளவில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் தமிழர் ஒருவர் உயிரிழந்தார் இருவர் காயமடைந்தனர்.

வயலில் வேலை செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்து ஐவர் மீதே படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட கற்குளத்தைச் சேர்ந்த தயாபரன் என்பவரின் தலையை படையினர் வெட்டி எடுத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பயங்கரவாதம், இனப்பிரச்சினை இரண்டுமே வடக்கு - கிழக்கில்!

### ஜே. ஆரின் கண்டுபிடிப்பு இது

வடக்கு-கிழக்கில் நிலவுவது பயங்கரவாதமும் இனப்பிரச்சினையும் ஆகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு முன்கண்டவாறு பதிலளித்தார்.

வடக்கு-கிழக்கில் தற்போது நிலவுவது பயங்கரவாதமா? அல்லது இனப்பிரச்சினையா? என்ற கேள்விக்கு இரண்டும் தான் என்று அவர் பதிலளித்தார். (ஒ-எ)

## திருமலையில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், டிச. 4
திருமலை மாவட்டம் மூதூரில் உள்ள ஈச்சிலம்பத்தையின் வடபகுதியான பூநகரில் நேற்று முன்தினம் நடத்திய அதிரடித் தாக்குதலில் படையினரிடமிருந்து ஆயுத தளபாடங்கள் பலவற்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — | 01 |
| ★ அதற்குரிய 'றம்' மகஸீன் | — | 04 |
| ★ தொடர் ரவைகள் | — | 495 |
| ★ ரீ 56 துப்பாக்கிகள் | — | 05 |
| ★ ரீ 81 துப்பாக்கி | — | 01 |
| ★ ஏ. கே. மகஸீன் | — | 14 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 1044 |
| ★ ஏ. கே. ஹோல்ஸர் | — | 05 |
| ★ ஜே. ஆர். கிரனேட் | — | 04 |
| ★ மழைக்கவசம் | — | 06 |
| ★ சப்பாத்து | — | ஒருசோடி |
| ★ இடுப்புப் பட்டி | — | 02 |
| ★ இராணுவப் பை | — | 02 |

ஈச்சிலம்பத்தை ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கும் — பூநகர் முகாமுக்கும் இடையே வைத்து அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட வந்த பூநகர் முகாமைச் சேர்ந்த 10 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வேளை அவர்களுக்கு உதவிக்கு வரமுயன்ற பூநகர், 49 ஆம் கட்டை, ஈச்சிலம்பத்தை முகாம் இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது

இத்தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட எட்டுப்படையினர் கொல்லப்பட்டதை பாதுகாப்பு செயற்பாட்டுத்தலைமையகம் உறுதி செய்திருந்தது — தெரிந்ததே. (இ-5)

## 4,500 பரல் மண்ணெண்ணெயுடன் மார்கோ கப்பல் நாளை வடக்கு நோக்கி வருகிறது

கொழும்பு, டிச. 4
குடாநாட்டுக்குத் தேவையான மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு 'மார்கோ' கப்பல் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்படும்.

இக்கப்பலில் யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். மாநகர சபை ஆகியவற்றுக்குத் தேவையான டீசலும் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4 ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் இக்கப்பலில் எடுத்து வரப்படுகிறது (இ-த)

## வீடு ஒன்றிலிருந்து எலும்புக் கூடுகள்!

### கல்முனையில் கண்டு பிடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 4
மட்டக்களப்பு மாவட்டம், கல்முனைப் பகுதியில் உள்ள விபுலானந்தர் வீதியில், வீடு ஒன்றில் இருந்து நான்கு மனித எலும்புக் கூடுகளை அப்பகுதி மக்கள் கண்டு பிடித்துள்ளனர்.

அங்கு குழி ஒன்று தோண்டிய சமயம் அந்த எலும்புக் கூடுகள் அதிலிருந்து வெளிப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

எலும்புக் கூடுகளில் உடைகள் பழுதடையாத நிலையில் இருந்ததாகவும் அதனை வைத்து ஒரு எலும்புக் கூட்டுக்கு உரியவர் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்ட ஒருவருடையதே அந்த எலும்புக் கூடு ஆகும்.

அவரின் மனைவியே எலும்புக் கூட்டை அடையாளம் காட்டினார். (இ-5)

# மதத்தலைவர்கள், பொதுமக்கள் கறுப்புப்பட்டி அணிந்து ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிச. 4
குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலையும் —

மற்றும் வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள், அரச செயலகங்கள், மக்கள் குடியிருப்புக்கள் மீதான தாக்குதல்களையும் கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மௌன ஊர்வலம் நேற்று நகரில் நடைபெற்றது. சர்வ மத தலைவர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

நேற்று முற்பகல் 9 மணியளவில் குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற பூசையைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமானது. தேவாலய பங்குத் தந்தை வண. பிதா. எம். ஜி. தேசநாயகம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது.

''குருநகர் மக்களின் சிதறிய இதயம்'' என்ற பதாகையின் கீழ் சர்வமதத் தலைவர்களும், தேவாலய பங்கு சபைத் தலைவர்களும் ஊர்வலத்தின் முன்னணியில் சென்றனர்.

அவர்களைத் தொடர்ந்து சர்வமத குருமார்களும், கன்னியாஸ்திரிகளும், குருநகர் பகுதிஉட்பட வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் பாடசாலை மாணவர்கள், குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்த பொதுமக்கள் ஆகியோரும் அணி அணியாகச் சென்றனர்.

ஊர்வலத்தில் சென்றவர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்தனர். பலர் கறுப்பு துணியினால் தமது வாய்களை மூடிக் கட்டியிருந்தனர்.

அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் சுலோகங்களைக் கொண்ட அட்டைகளை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

சுமார் 2 மைல் நீளமான அந்த ஊர்வலம் முன்னர் அறிவிக்கப்பட்ட வீதிகள் ஊடாகச் சென்றது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தை ஊர்வலம் அடைந்த போது அங்கு வைத்து மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி திரு. பியட் சுவெச்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், டிச. 4
கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டிடங்களில் தஞ்சம் புகுமாறு பொதுமக்களை அரசாங்கம் கேட்டுக்கொள்கின்றது. ஆனால் ஆயுதப் படைகள் பின்னர் அவ்விடங்களில் அடைக்கலம் புகுந்த மக்களை குண்டு போட்டுக் கொன்று வருகின்றன.

குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயம் மீதான குண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக மேற்படி தேவாலய பங்குத் தந்தையால் ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

1861 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயம் யாழ். மறைமாவட்டத்தில் மிகப் பழைய தும் பெரியதுமான தேவால

(3 ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் நில நடுக்கம்

புதுடில்லி, டிச. 4
நேற்று பிற்பகல் 2.41 மணியளவில் இலேசான நில நடுக்கம் புதுடில்லி நகரை உலுக்கியது.

3.8 றிச்டர் அளவு கொண்ட இந்நில நடுக்கத்தின் மையம் புதுடில்லியில் இருந்து 55 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது. ஹரியானா மாநிலமும் இந்நில நடுக்கத்தினால் அதிர்ந்தது.

## ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை

### பரீட்சார்த்திகள் ஏதாவது ஒரு வழியில் அடையாளம் காண்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், டிச. 4
எதிர்வரும் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை அல்லது தபால் திணைக்கள அடையாள அட்டை, அல்லது கடவுச்சீட்டை சமர்ப்பித்து தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் எனவும், தவறின் அவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் யாழ். தெற்கு கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

ஆனால் முதன்முறையாக

(3 ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை நேற்று நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், டிச. 4
நேற்று கிளாலி படகுச் சேவை நடைபெறவில்லை. கடல் கொந்தளிப்பாக இருந்ததாலும் — புயல் அச்சுறுத்தல் இருந்ததாலும் படகுச் சேவை நடைபெறவில்லை என சொல்லப்பட்டது.

பெரும்பாலான பயணிகள் நேற்றிரவு திரும்பிவந்தனர். (இ-9)

## உத்தர பிரதேச முதல்வராக முலாயம் சிங் யாதவ்

உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சராக திரு. முலாயம் சிங் யாதவ் இன்று பதவியேற்க இருக்கிறார்.

புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி திரு. யாதவை, மாநில ஆளுநர் மோதிலால் வோறா நேற்று அழைத்தார்.

425 உறுப்பினர்களைக் கொண்ட உத்தரப் பிரதேச சட்டசபையில் முலாயம் சிங் யாதவ் தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சமாஜ்வாதி ஜனதா கட்சி கூட்டணிக்கு 176 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு இந்திரா காங்கிரஸும் ஜனதாதள் கட்சியும் திரு. முலாயம் சிங் யாதவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளன என்பது தெரிந்ததே.

177 உறுப்பினர்களைக் கொண்ட பாரதீய ஜனதாக் கட்சியும் புதிய அரசை அமைக்க தம்மை அழைக்கும்படி மாநில ஆளுநரைக் கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இமாசலப் பிரதேச முதலமைச்சராக இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு வீரபத்திரசிங் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

### வரவேற்பு விழா மலர்

## பல்லாண்டு வாழி! வாழி!!

சைவத்தின் திருவிளக்கே தமிழில் ஊறி
சன்மார்க்க நெறிகாட்டும் ஞான தீபா!
வையகத்தில் கருணைநீதி பக்தி யாவும்
வாழவைக்கும் சன்யாஸ மூர்த்தி நீயே!
செய்யதிரு ஞானசம் பந்த ஸ்வாமி
செழுநாம ஆதீன முதல்வரான
துய்யகுரு சோமசுந் தரப ரமாச்
சாரீயஸ்வா மிகள்நீடு வாழி! வாழி!!

நல்லைநகர் தம்பிரான் ஸ்வா மிகளின்
நளினமலர்ப் பதம்சிரமேல் சூடி நின்றே
வல்லதமிழ் வளர்சைவப் பக்தி நெறி
வாழ்வாங்கு வாழஉபன் யாஸம் செய்தே
சொல்லழகு பொருளழகு சோபிதம் செய்
சொன்மாரி பொழிந்தன்புக் கருணைபூக்க
நல்லசோம சுந்தரப ரமாச் சார்ய
நற்குருவும் பல்லாண்டு வாழி! வாழி!!

ஈழநாட்டுச் சைவத்தமிழ் மக்கள் சார்பில்
''கவிமாமணி''
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந வீரமணிஐயர்.



நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
பரமாச்சார்ய சுவாமிகள்

## நல்லை ஆதீனப் பராமரிப்பு நிதியம்

நல்லை ஆதீனம் சைவ சமயத்தவர்களுக்கு வழிகாட்டு நிலையம். நல்லை ஆதீன முதல்வர் சைவசமயத்தவர்களின் வழிகாட்டியாகக் கொள்ளப்பட வேண்டியவர். எனவே, நல்லை ஆதீன வளர்ச்சிக்கு நாம் எல்லோரும் ஏதோ வகையிலே பணி புரிய வேண்டும்.

நல்லை ஆதீனத்துக்குச் செல்பவர் பலர் உளர்; அதனைப்பற்றி உசாவுபவர் பலர் உளர். ஆனால், அவ்வாதீனம் எப்படி நடைபெறுகின்றது; ஒரு நாளைய பராமரிப்புக்கு ஆதீன முதல்வர் படும் இன்னல்கள் பற்றியெல்லாம் உசாவுபவர் சிலரே. இந்நிலை மாறி, எமக்கு இருக்கும் ஒரேயொரு ஆதீனத்தின் உன்னத நிலைக்குப் பலரும் உதவும் நிலை உருவாக வேண்டும்.

பலரும் இந்நல்ல பணிக்கு உதவ வழி செய்யும்படியாக, எங்கள் மதிப்புக்குரிய சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஒரு சிறிய குழு அண்மையிலே கூடி, நல்லை ஆதீனப் பராமரிப்பு நிதியம் ஒன்றைத் தொடக்கியது. இந்நிதியத்தின் பொருளாளராக இயங்கும் திரு க. சோமசேகரம் அவர்களுடைய அயராத முயற்சியினாலே இந்நிதியத்துக்குப் பல வர்த்தகப் பெருமக்களும் ஏனையோரும் நிதி வழங்கி வருகின்றார்கள். இந்நிதியம் பெருக வேண்டும். நல்லை ஆதீனம் இன்னல் எதுவுமின்றி இயங்க வேண்டும்.

இக்குறிக்கோளை அடைய எல்லோருடைய உதவியினையும் நாம் வேண்டி நிற்கிறோம்.

நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியிலே சேமிப்புக் கணக்காகத் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிதியினைக் கையாளும் உரிமை ஆதீன முதல்வருக்கு மட்டுமே உண்டு. இந்நிதியத்தினுடைய சேமிப்புக் கணக்கு இலக்கம் 25826. நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் இக்கணக்குக்குப் பணம் செலுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். ★

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
ஆலோசகர், நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்

## நல்லை ஆதீனத் திருத்தொண்டு மிளிர
## சுவாமிகளின் அருளாட்சி ஓங்கட்டும்

''இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டவர்
பெருமை பிறங்கிற்றுலகு''

என்று பாடி வைத்தார் திருவள்ளுவர்.

இலௌகிகம் தெய்வீகம் என்ற இரு நெறியில் இந்த உலக மக்கள் தமக்கேற்றபடி ஈடுபாடு கொண்டு வாழ்வது கண்கூடு. மக்கட்குப் பெருமை தருவன கல்வி, செல்வம், ஒழுக்கம் என்பன. எனினும் எல்லாப் பெருமைகளையும் விட பற்றற்ற துறவிகளின் பெருமை உயர்ந்ததாகவே கருதப்படுகிறது. எல்லாச் சமயத்தவர்களும் இத்தகையோரைக் குருவாக மதித்து வழிபடுகின்றனர். ''துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்ற பழமொழியும் சிந்திக்கத்தக்கது.

எமது நாட்டில் சைவச் சால்பும் துறவு வாழ்வும் கொண்டு வாழ்ந்து வழிகாட்டிய குருமணிகள் பலரை நாம் ஞாபகத்திலிருத்த வேண்டும். யோகர் சுவாமிகள் போன்ற முற்றுந் துறந்த முனிவர்கள் வாழ்ந்து வழிகாட்டிய நாடு எமது நாடு ''ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்! ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்'' என்பது இவர்களின் துறவு நோக்காகும்.

இந்தப் புனித பாதையிலே தனக்கென்று ஒரு பாணியை அமைத்து நல்லுரைகளினாலும், திருத்தொண்டுகளினாலும் ஒப்பற்ற நிலையில் வாழ்ந்தவர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரியார் அவர்கள். இவர்களுடைய பேருழைப்பினாலும் தூய உள்ளத்தினாலும் அமைக்கப்பட்டதே நல்லை திருஞானசம்பந்த ராதீனமாகும்.

இன்று இவ்வாதீனத்தில் அருளாட்சி நடத்துபவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியார் என்னும் நாமத்துக்குரிய சுவாமிகளாவர். நல்லைக் குருமணியின் முதன்மைச் சீடராகவும் அவர்கள் வழியில் பிறழாது முறைப்படி பக்குவமடைந்தவராகவும் விளங்குபவர் இவர்களே.



சிவத்தமிழ்ச் செல்வி
• தங்கம்மா அப்பாக்குட்டி •

தலயாத்திரை

சமீபத்தில் சுவாமிகள் தலயாத்திரையின் பொருட்டு பாரத நாடு சென்று திரும்பியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. நாட்டுத் தலங்கள் யாவற்றையும் தரிசித்து மீண்டமை தென்னாட்டுத் தலங்கள், வட நாட்டுத் தலங்கள், ஈழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரவேற்பு விழா

இடம்: இளங்கலைஞர் கலா மண்டபம்
காலம்: 5-12-1993 ஞாயிறு பி.ப. 5-00 மணி
தலைவர்: பேராசிரியர் அ சண்முகதாஸ்
(ஆலோசகர், நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்)
முதன்மை விருந்தினர்: சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

### நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை
மங்கல விளக்கு ஏற்றல்
இறை வணக்கம்
அமைதி வணக்கம்
வரவேற்புரை: கவிஞர் சோ. பத்மநாதன்
(இணைச் செயலாளர், நல்லை ஆதீன- பராமரிப்பு நிதியம்)
ஆசியுரை: பிரம்ம ஸ்ரீ மகாதேவக் குருக்கள்
தலைமையுரை
முதன்மை விருந்தினர் உரை
ஆதீன வைப்பு நிதியம் கையளிப்பு;
கையளிப்பவர், சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள்
சிறப்புரைகள்:
அருட்கவி சி. விநாசித்தம்பி
திரு. ஆர். வெங்கட்ராமன்
(முகாமையாளர், கொமேர்ஷல் வங்கி)
திரு. சி. வேலாயுதம்
(யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. த. சிவகுமாரன்
(ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி).
திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
கவிஞர் புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், தமிழீழ கலை, பண்பாட்டுக் கழகம்)
கலை நிகழ்ச்சி
✻ வில்லிசை
கலாவினோதன் கணபதிப்பிள்ளை குழுவினர்


## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு சோடி வான்கோழி, இனிகோழிகள், பன்டம் கோழிகள் விற்பனைக்குண்டு. அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பன்டம் கோழிமுட்டைகள் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, யாழ்ப்பாணம். (28257)

### மணமகள் தேவை

லண்டனில் உள்ள நட்சத்திரம் சதயம், உயரம் 5' 3'' உடைய 09-05-1961இல் பிறந்த M.Sc (Electronics) பொறியியலாளருக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை. 921, மே/பா உதயன். (6833)

28 வயது, தொழில்நுட்பக் கல்லூரியில் படித்த, 4இல் செவ்வாயுள்ள கனடா மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. கொழும்பு வந்து விவாகம் செய்வார். தமையனும், சகோதரியின் கணவரும் பொறியியலாளர்கள். தொடர்பு: இ. கனகசபாபதி விதானையார், 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (6828)

### பாலர் ஆசிரியராக...

பாலர் ஆசிரியர் பயிற்சிக்கு க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை, சனி, ஞாயிறு வகுப்பு நடைபெறும் நேரில் சமுகம்தர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (6832)

### வெளிவந்துவிட்டது!

இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் எழுதிய தமிழ் இலக்கணம் வினா-விடை (ஆண்டு- 9, 10, 11) வெளிவந்து விட்டது. பரீட்சைகளில் அதிசிறப்புச் சித்திபெற உதவும் அரிய வழிகாட்டி. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (2823)

### தவறிவிட்டது

ஒருபவுண் நிறையுள்ள புதிய கைச்சங்கிலி ஒன்று பாண்டியன் தாழ்வுக்கும், யாழ் நகருக்கிடையிலோ அன்றி யாழ் நகருக்கும் – திருநெல்வேலி புனித சவேரியார் தேவாலயத்திற்கும் இடையிலோ 02-12-93 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் திருமதி இரா. எப். அரியநாயகம், வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளிக்கவும் சன்மானமுண்டு. (6836)

### மணமகன் தேவை

க. பொ. த. (உ. த)படித்த 7இல் செவ்வாய் தோஷமுள்ள 29 வயது அழகிய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. அவிட்டம் 3ஆம்பாதம். ஆசிரியர், அல்லது அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் நேரில் பேசித் தீர்க்கலாம் தொடர்பு: V. P. சண்முகநாதன், 15(3)பி பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (28239)

### மனைப்பொருளியல்

ஆண்டு 9, மாணவர்களுக்குப் பயன் தரும் மனைப் பொருளியல் வினா - விடை வெளிவந்து விட்டது. பரீட்சையில் அதிசிறப்புச் சித்தி பெற உதவும் நூல். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (28237)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 31 – 01 – 1933

உதிர்வு: 04 – 12 – 1992

### திருமதி சரஸ்வதி சரவணமுத்து

கனவுகள் நனவானதோ
நனவுகள் கனவானதோ.

நினைவு கூரும்;
கணவன், மகன், குடும்பத்தினர்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(28272)

## நாவலர் குருபூசை விழா

உ

காலம்: 05 - 12 - 1993 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00மணி
இடம்: ஓடையம்பதிகற்பக விநாயகர் ஆலயம் உரும்பராய்

விசேஷ பூசை ஆராதனைகளுடன்
பி.ப. 4-00 மணியளவில்

'நாவலர் பரம்பரியமும்
இன்றைய நிலைப்பாடும்'

என்ற பொருளில் சிவத்தமிழ் வித்தகர்
சிவ மகாலிங்கம் B. A Dip in Ed.
(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)
அவர்களின் விசேஷ சொற்பொழிவும் இடம்பெறும்.

சைவ மெய்யன்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துசமய விருத்திச் சங்கத்தினர்.
உரும்பராய்.

(6835)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஈ. கே. சண்முகநாதன்

(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

தோற்றம்: 14 – 12 – 1924
மறைவு: 04 – 12 – 1985

நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே!
ஆண்டுகள் எட்டு ஓடிமறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம்
மீண்டும் வரும் நினைவலையால் உருகியழும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

(6829)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வன் யோ. சஜீவ்

ஆலங்குளாய் சண்டிலிப்பாயைச் சேர்ந்த
யோகலிங்கம் - சந்திராணி

தம்பதிகளின் செல்வப் புதல்வன் ''சஜீவ்'' தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (04—12—1993) தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, இணுவில் அப்பம்மா, மாமிமார், மாமா, மச்சான்மார் பிரதாபன், பிரசாந்தன், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் வத்சலா, வாசுகி, கௌதமி, தாவடி பெரியப்பா, பெரியம்மா, அக்கா ஜீவனி, தியாகு பெரியப்பா, U. K. பெரியமாமா குடும்பத்தினர், சண்டிலிப்பாய் சின்னமாமா குடும்பத்தினர், பெரியப்பா, பெரியம்மா, சுமதி அக்கா, சுதன் அண்ணா (சுவிஸ்), ஆசையம்மா, றஞ்ஜித்தா அக்கா, ராசா மாமா குடும்பத்தினர், குஞ்சு மாமா குடும்பத்தினர், உடுவில் பெரியம்மா, பெரியப்பா, பிரியா அண்ணா, சாந்தன் அண்ணா, பிரியந்தி அக்கா, தம்பி இஷான் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் அம்பலந்தறை வைரவர் பெருமான் அருள்பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (6733)


## மக்கள் வங்கி தொழில் வாய்ப்பு

எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்
போட்டிப் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது விவேகம், பொது அறிவு

ஆரம்பம்: 06 - 12 - 1993
மு. ப. 9-00 மணி

✻ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் ✻
✻ தொடர்ந்து 10 தினங்கள் ✻

- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- மு.ப. 9-00 மணி முதல்—12-00 மணி வரை
- நாளாந்தக் கட்டணம் ரூபா 25-00

### அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகில்) (சி-6580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## உள்நோக்கம் தெரிகிறது

தென்னிலங்கையில் வைத்துப் பொலிஸார், இராணுவத்தினர், ஆயுதக் குழுவினர் ஆகியோர் கைது செய்த தமிழர்களில் ஐந்நூறு பேரைப் பற்றி எவ்வித தகவலும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டனர். இப்போதும் கைது செய்யப்படுகின்றனர்.

இவர்களில் ஐந்நூறு பேர்களைப் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை என்று காணாமற் போனோர் சங்கத்தின் தலைவர் விஜயதாசா பத்திரானா தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவி விட்டார்கள். அதனால் பாதுகாப்புக் கருதித் தேடுதல் நடத்துகிறோம் என்று கூறி பொலிஸாரும், ஆயுதப்படையினரும் பகலிலும், இரவிரவாகவும் தமிழர்களைக் கைது செய்த அடாவடித்தனம் குறித்து இப்பத்தியில் முன்னரும் எழுதியிருந்தோம்.

பாதுகாப்பு முன்னேற்பாடு என்ற பேரில் தமிழர்களை இம்சிப்பதும், அவர்களிடம் இருந்து சுளை சுளையாகப் பணம் அறவிடுவதுமே இந்தக் கைதுகள் படலத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன.

கைது செய்யப்படுவோரை விடுவிப்பதில் சிங்களவரான இராணுவத்தினரும், பொலிஸாரும் மட்டும் இலகுவாகப் பணம் சம்பாதிக்கவில்லை. தமிழ்ச் சட்டத்தரணிகள் சிலரும் தரகர்களாக நின்று இந்த உழைப்பில் லட்சாதிபதிகளாகிவிட்டார்கள்!

வெளிநாடுகளில் பணி புரிந்துவிட்டு வரும் தமிழர்களைக் கூட இந்தக் கழுகுக் கூட்டம் விட்டு வைப்பதில்லை. சந்தேகத்தின் மீது கைது செய்வதாகக் கூறி விமான நிலையத்தில் வைத்துக் கூட்டிச் செல்லப்படுவோர் கழுகுக் கூட்டத்தினருக்குப் பணத்தை எடுத்து வீசினால் மட்டுமே வெளியே வரலாம்.

பணம் சம்பாதிக்கும் இந்தப் பின்னணிக்கு அப்பால், 500 தமிழ் இளைஞர் யுவதிகள் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்படும் நிலை வந்திருப்பது மிகவும் பாரதூரமானதாகும். தமிழர்களில் இளம் சந்ததியினரை அழிக்கும் சிங்கள அரசின் உள்நோக்கத்தைப் பிரதிபலிப்பதாகும்.

வடக்கு - கிழக்கில் தமிழ் இளம் சந்ததியினர் குண்டு வீச்சாலும், எறிகணை வீச்சாலும் கொல்லப்படுகின்றனர். அதுவும் போதாது என்று போசாக்குப் பற்றாக்குறை, மருந்தின்மை, தொழிலின்மை போன்ற மறைமுக அழுத்தங்களாலும் தமிழ் இளம் சந்ததியினர் சாகடிக்கப்படுகின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலதிகமாகவே தெற்கிலும், மலையகத்திலும் பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்ற போர்வையின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள்.

மரத்தின் இலையில் பூச்சி பிடித்து விட்டால், அதனைப் போக்குவதற்கு மரத்தையே வேரோடு வெட்டி விடுவது தான் சுலபமான வழி என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். அதே வகையில் ஸ்ரீலங்கா அரசும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழர்களை பூண்டோடு அழித்துவிட்டால் போகிறது என்று திட்டமிட்டுள்ளது.

அந்தத் திட்டத்தை இராணுவத் தீர்வு என்றும், பொருளாதாரத் தடை என்றும், பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கை என்றும் பல வடிவங்களில், பல கட்டங்களில் நடைமுறைப்படுத்துகிறது. அவற்றில் ஒரு வடிவம் தான் தமிழ் இளைஞர் — யுவதிகளைக் கைது செய்து காணாமற் போனோர் பட்டியலில் சேர்த்தல்.

சர்வதேச அழுத்தம் எதுவுமோ அல்லது மனித உரிமை அமைப்புக்களின் குரலோ ஸ்ரீலங்கா அரசைத் திருத்தும் என்று இனியும் நம்புவது எவ்வாறு?

※ பிரபஞ்சத்தை வலம் வந்து கொண்டிருக்கும்

# 'ஹபிள்' விண்கலத்திற்கு அவசரமாக 7 அமெ. விஞ்ஞானிகள் துணிகர பயணம்

## ரூ. 160 கோடி டொலர் தொலைநோக்கியை திருத்த முயற்சி

வாஷிங்டன், டிச. 4

தற்போது பிரபஞ்சத்தை வலம்வந்து கொண்டிருக்கும் ஹபிள் விண்கலத்தில் பழுதடைந்து போயுள்ள 160 கோடி டொலர் பெறுமதியான தொலை நோக்கியை (Telescope) திருத்துவதற்காக ஏழு விண்வெளி விஞ்ஞானிகளைக் கொண்ட குழு ஒன்றை அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அனுப்பி வைத்துள்ளது. இவர்களில் அறுவர் ஆண்கள் ஒருவர் பெண்.

இக்குழுவுடன் என்டவர் விண்கலம் நேற்று முன்தினம் (வியாழன்) அண்டவெளிக்கு கென்னடி முனையில் இருந்து அனுப்பப்பட்டது.

62 கோடி 90 லட்சம் டொலர் செலவில் இத்திருத்த விண்பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நாஸா நிறுவன இயக்குநர் நேற்று அறிவித்தார்.

ஹபிள் விண்கலத்தை என்டவர் கலம் நெருங்கிக்கொண்டிருப்பதாகவும் —

இத்துணிகர பயணம் வெற்றியீட்டும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பெரும்பாலும் என்டவர் விண்கலத்தில் செல்லும் விண்வெளி வீரர்கள் இன்று சனிக்கிழமை தங்கள் கலத்தில் இருந்து வெளியே வந்து விண்வெளியில் நடந்தபடி ஹபிள் விண்கலத்தை அடைந்து திருத்தும் பணியை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக நாஸா வட்டாரங்கள் தெரிவித்தன.

விண்வெளி ஆராய்ச்சியில் அடுத்தடுத்து பின்னடைவுகளை சந்தித்துள்ள நாஸா நிறுவனத்தின் எதிர்காலம் என்டவர் விண்கலத்தின் இப்பயணத்தின் வெற்றியிலேயே தங்கியிருப்பதாகவும் விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

பிரபஞ்சத்தின் மர்மத்தைக் கண்டறிவதற்காக சக்தி வாய்ந்த தொலைநோக்கியுடன் ஹபிள் விண்கலத்தை நாஸா நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## பனம் பொருள்கள் கப்பலில் கொழும்புக்கு

பனம் பொருள் உற்பத்திப் 'பொருள்கள் யாழ்ப்பாணத்திலிருந்து 'வாதுவ' கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

கொழும்பில் சந்தைப் படுத்துவதற்காக பெட்டி, பாய், பன்னவேலைப் பொருள்கள் உட்பட பல்வேறு பனம் உற்பத்திப் பொருள்கள் பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

தற்போது பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் வாதுவ கப்பல், கொழும்புக்கு புறப்படும் போது இவற்றை ஏற்றிச் செல்லும். (ஒ-173)

## ஆசிரிய மாணவர் பயிற்சி; நேர்முகப் பரீட்சை 18 இல்

யாழ்ப்பாணம், டிச. 4

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் அடுத்த ஆண்டு பயிற்சி பெறுவதற்கான ஆசிரியமாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

யாழ். தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இதனைத் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளோரின் பெயர்ப்பட்டியல் கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தும் பட்டியலில் பெயர்கள் இடம்பெறாத விண்ணப்பதாரிகள் தாம் முன்னர் விண்ணப்பித்ததை உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விண்ணப்பிப்போருக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-111)

## 'சின்ன விழிகள்' வீடியோ இன்று வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், டிச. 4

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், நிதர்சனம் நிறுவனத்தினரும் இணைந்து தயாரித்த 'சின்ன விழிகள்'' என்ற வீடியோ குறும்படத்தின் வெளியீட்டு விழா இன்று சனி பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலை, பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் தலைமையில் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வீடியோ குறும்படத்தை அங்கு வெளியிட்டு வைப்பார். யாழ். மாவட்டத் தளபதி திரு. மகான் அதனைப் பெற்றுக் கொள்வார்.

கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. சி. சேரலாதன் வெளியீட்டுரையும் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி சிறப்புரையையும் ஆற்றுவர்.

வீடியோ குறும் படத்தை உருவாக்கிய கலைஞர்கள் அங்கு வைத்து கௌரவிக்கப்படுவர். தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

திரு. அ. யேசுராசா, திரு. செம்பியன் செல்வன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரின் மதிப்புரைகளும் இடம்பெறும். (இ-5)

## பூநகரி முகாம் தகர்ப்பு: காணாமற்போனபடையினர் விவரம் செஞ்சிலுவையிடம்

### கையளித்ததாக சபையில் அறிவிப்பு

பூநகரியில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் போது காணாமற்போனதாகக் கருதப்படும் இராணுவத்தினரதும், கடற்படையினரதும் பெயர், விவரங்களை அரசு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம்கொடுத்திருக்கிறது.

இவ்வாறு சுற்றுப் புற சூழல் மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

காணாமற்போன பல நூற்றுக்கணக்கான ஆயுதப்படை வீரர்களின் நிலைமை பற்றி விசாரணை செய்யும் படியும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை அரசு கேட்டிருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆயினும் படையினரில் எத்தனை பேர் காணாமற் போய்விட்டார்கள் என்பது பற்றி அவர் குறிப்பிடவில்லை.

## பரீட்சார்த்திகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் மாத்திரம் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு மேற்கூறியவை எவையேயும் இல்லாதவிடத்து உறுதிப்படுத்தப்பட்ட நிழல் படத்துடன் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

அதிபர் பிரஸ்தாப பரீட்சார்த்திகளை கல்விப் பணிப்பாளரிடம் நேரில் அழைத்துச் சென்று இரு படப்பிரதிகளை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் —

இதற்கு வசதியாக இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணிவரையும், நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் 12.00 மணிவரை கல்விப் பணிப்பாளரை கல்வித் திணைக்களத்தில் சந்திக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-க-162)

## குரானா பதவி ஏற்றார்

புதுடில்லி பிரதேசத்தின் முதலாவது முதலமைச்சராக பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த மதன்லால் குரானா நேற்று முன்தினம்பதவிப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

## "உண்மைகள்" அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிச. 4

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் அவை நடத்தும் வளவை வளவனின் ''உண்மைகள்'' நூலின் அறிமுக விழா நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறும்.

கைதடி கலை, பண்பாட்டுக் கழக இணைப்பாளர் திரு. சி. தங்கராசா விழாவுக்குத் தலைமை வகிப்பார். (க)

## அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை நண்டார்களும் இல்லை

### இ. தொ. கா. பேச்சாளர் கூறுகிறார்

அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை, நிரந்தர நண்பர்களும் இல்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பேச்சாளர் என். விஜயசிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது குறித்து இ. தொ. கா. பேச்சுக்கள் நடக்கிறதா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுடன் இ. தொ. கா. உத்தியோகபூர்வ பேச்சுகளை நடத்தவில்லை; சம்பிரதாயமற்ற பேச்சுகளையே நடத்துகிறது என்றும் அவர் கூறினார்.

மலையகத் தொழிலாளர்களை வெறும் வாக்களிக்கும் இயந்திரங்களாக பயன்படுத்த முடியாது. அவர்கள் எம்மைக் கேள்விகேட்பார்கள். அதற்கு நாம் பதில் சொல்லியே ஆக வேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களுக்குச் சமமாக மலையகத் தொழிலாளர்களையும் வைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## கலந்துரையாடல்

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடக்கவிருக்கிறது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர்கள் ஆகியோரை இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஜனாதிபதிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்களில் ஒன்றாகும்.

தேவாலயக் கட்டடம் வானில் இருந்து எளிதில் கண்டு கொள்ளக் கூடியதாக இருப்பதும் — அதன் அண்மையில் போராளிகள் முகாம்கள் இல்லாதிருப்பதும் விமான ஓட்டியின் நடவடிக்கையை முற்றிலும் நியாயப்படுத்த முடியாதாக்கியுள்ளது.

இந்த நிகழ்வு குறித்து விசாரணை புரிய ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும்படியும் சம்பந்தப்பட்ட விமான ஓட்டிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் படியும் — சம்பவத்தில் பலியானவர்களுக்கும் தேவாலயத்துக்கும் இழப்பீட்டை வழங்க பணிக்குமாறும் தங்களிடம் வற்புறுத்துகின்றோம். — என்று உள்ளது.

நேற்று நகரில் நடைபெற்ற மௌன ஊர்வலத்தின் முடிவில் அந்த மகஜர் யாழ். செயலகத்தில் வைத்து மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் அந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ளார். மகஜரின் பிரதிகள் தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரனுக்கும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசைக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (இ-17-162-5)

## அரசியல் தீர்வு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டம்தான். பிரதமருடன் நான் பேசும்போது, இதற்கு ஓர் அரசியல் தீர்வு காண வழி வகுக்கும்படி அவரை நான் கேட்டேன். இராணுவத் தீர்வு சரிவராது என்பதை நான் பிரதமருக்கு சில காரணங்களைக் காட்டி விளக்கியுள்ளேன்.

அரசியல் தீர்வைக் காணு

மாறு நான் நான் இங்கு கொழும்பில் பலரைக் கேட்டுள்ளேன்.

கே: அதற்கு அவர்கள் என்ன பதில் கொடுக்கிறார்கள்?

ப: பூநகரித் தாக்குதலின் பின்னர் இப்போது கொஞ்சம் யோசிக்கிறார்கள்போல் இருக்கிறது. என்ன மாதிரி, சில மாற்றங்கள் வரும் என்பதை என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் சில யோசனைகள் இருப்பதாக எனக்குத் தெரிகிறது.

கே: யாழ்ப்பாணத்தில் நடந்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை ''சுப்பசொனிக்'' விமானங்கள் நடத்தியதாகக் கூறப்படுகிறதே. உண்மையா?

ப: எமது செயலகம், தேவாலயம், யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்னால், பாடசாலை ஆகிய இடங்களில் சுப்பசொனிக் விமானமே குண்டு வீச்சுகளை நடத்தியது.

''சுப்பசொனிக்'' விமானம் செய்யும் அநியாயங்கள் பற்றியும் மக்கள் படும் கஷ்டங்கள் பற்றியும் நான் பாதுகாப்பு அமைச்சுக்கு எடுத்துக் கூறியுள்ளேன் கடும் ஆட்சேபனையையும் தெரிவித்தேன்

வியாழக்கிழமைபிரதமரைச் சந்தித்துப் பேசியபோது, இது பற்றிய முழு விவரங்களையும் அவரிடம்சமர்ப்பித்துள்ளேன்.

இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருக்கிறார். (அ-எ)

## மதத்தலைவர்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர் அந்த மகஜரைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் ஊர்வலம் யாழ். செயலகத்தை முற்பகல் 11.30 மணியளவில் சென்றடைந்தது. ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் அங்கு கையளிக்கப்பட்டது. மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் அந்த மகஜரைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார். பின்னர் அங்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

தேவாலய பங்குத் தந்தை ஆர். எம். ஜி. நேசநாயகம், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ், யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் வண. பிதா. இம்மானுவேல் ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

(இ-5 9-15-17-111-51 162-30)

## இன்று

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பிரதேச செயலர் பணிமனையில் நடைபெறும். இக்கலந்துரையாடலுக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம அலுவலர்களையும் தவறாது சமுகம் தரும்படி கோரப்பட்டுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 4

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணி முதல் நடைபெறும்.

ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. த. அழகரத்தினம் தலைமையில் நடக்கும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கலந்து கொள்வார். (இ-3)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டு விழா - 1993 இன் பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். வடக்கு கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் யாழ். தெற்கு கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (த)

## மரணம்

வரணி குடமியன் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி மாலை இடம்பெற்ற சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சின் போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

குடமியன் வேவிலைச் சேர்ந்த வி. இராசம்மா (வயது 67) என்பவரே மரணமானவர் ஆவார். (இ-15-117)

உரம் இல்லை என்று சொல்லாதே - இயற்கை
உரம் உன் காலடியில் மறவாதே!

## வாழ்த்துகிறோம் - பாராட்டுகிறோம்

எமது பாடசாலையில் மிகக் குறுகிய காலத்தில் மிகவும் கவர்ச்சியாகவும், எழுச்சியாகவும், கல்வி - இணைப்பாடங்களில் முன்னேற்றத்தை உண்டாக்கிய

**அதிபர் வே. சண்முகராசா**
அவர்கள்

கோண்டாவில் கொத்தணி அதிபராகப் பதவியுயர்வு பெற்று மாற்றலாகிச் சென்றமையை முன்னிட்டு, அவருக்கான பாராட்டுக் கூட்டம் நாளை (05-12-93) ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
சந்திர மௌலீச வித்தியாலம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(28278)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்

பாதுகாப்பு உத்தியோகத்தர்/பயிலுநர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், 5அடி 4அங்குலத்துக்குக் குறையாத உயரமும், 30 அங்குலத்துக்குக் குறையாத மார்புச் சுற்றளவும் உடையவராக இருக்க வேண்டும்.

முன் அனுபவம், கல்வித் தகைமை, நற்குணம் ஆகியவற்றுக்கான சான்றிதழ்களுடன் 06-12-1993, 07-12-1993 ஆகிய தினங்களில் முற்பகல் 9-30 மணிக்கும் நண்பகல் 12மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**மக்கள் வங்கி**

எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்
போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்:- 06 - 12 - 1993**
**காலை:- 9-00 மணி**

ஆசிரியர்
**அ. குமாரவேல்**
— இயக்குநர்

(சி, 6579)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக ஸ்தாபகரும், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் யாழ். மாவட்ட லியோ தலைவரும், முன்னாள் யாழ். லயன்ஸ் கழகத் தலைவரும், நற்சமூக சேவையாளருமான.

**LION. L. ரேமன் முத்தையா**
(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

அவர்களின் மறைவால் நாம் ஆழ்ந்த துயரும், அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். அவர்களது குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறுவதுடன், அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எமது கல்லூரி சார்பாகவும், கழகம் சார்பாகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— லியோ கழகம் —
யாழ். பரியோவான் கல்லூரி.
(28281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி சபாதினி சோதிசிவம்

நாகர் கோயில் குடாரப்பைச் சேர்ந்த
சோதிசிவம் - கோகிலரஞ்சிதம்
தம்பதிகளின் அருமைப் புதல்வி சபாதினி இன்று (04-12-1993) தனது முதலாவது பிறந்த நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். புளியடிப்பிள்ளையார் நாகதம்பிரான் அருளால் பல்கலைகளும் பயின்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழவேண்டுமென அப்பா, அம்மா, அண்ணா, உற்றார், உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள்.

(சி-6640)

## "வட அல்வை முருகேசனார்"
## பவள விழாவும்

சமூக வாழ்வும் பணியும் பேசும் வரலாற்று நூல்

## வெளியீட்டு விழாவும்



இடம்: ஸ்ரீலங்கா வித்தியாசாலை
அல்வாய் வடக்கு

காலம்: இன்று (04 — 12 — 1993)
சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

விழா நிகழ்வுகள்

நிகழ்ச்சி நிரல்:

தலைவர்: திரு. கி. கணேசன்
அதிபர், ஸ்ரீ லங்கா வித்தியாசாலை
அல்வாய்

★ மங்கள விளக்கேற்றல்:
திரு கா. க. கிருஷ்ணபிள்ளை
இளைப்பாறிய அதிபர்
திரு க சின்னத்துரை
திரு இ மகாலிங்கம்
திரு இ இராசையா

★ அமைதி வணக்கம்:

★ தமிழ்த்தாய் வாழ்த்து:
திரு. க. கந்தசாமி ஆசிரியர்

★ வரவேற்புரை:
திரு. க சின்னராஜன்
வங்கி உத்தியோகத்தர்

★ தலைமையுரை:

★ வாழ்த்துரை: திரு டொமினிக் ஜீவா
ஆசிரியர், மல்லிகை

★ நூல் வெளியீட்டுரை:
பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி
தலைவர், நுண்கலைப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்

★ பொன்னாடை போர்த்தல்:

★ வாழ்த்து மடல் வழங்கல்:
திரு. வே. க பாலசிங்கம் ஆசிரியர்

★ மதிப்புரை;
டாக்டர் எம்.கே. முருகானந்தம் அவர்கள்
அரசண்ணா அவர்கள்
தமிழீழ அரசியற் பயிற்சிப் பள்ளிப்-
பொறுப்பாளர்

★ சிறப்புரை: தெணியான் அவர்கள்

★ பாராட்டுரைகள்:
டாக்டர் பொ. மகாலிங்கம் அவர்கள்
திரு. ஆ தம்பையா
உப அதிபர், தேவரையாளி இந்துக் கல்லூரி
திரு. த. கலாமணி
விரிவுரையாளர். யாழ். பல்கலைக்கழகம்
திரு வே. இளையகுட்டி ஆசிரியர்
திரு ஆர். பி குணரட்ணம்
திரு. க. கிருஷ்ணபிள்ளை
இளைப்பாறிய ஆசிரியர்
திரு கே. ஜி. மகாலிங்கம்
இளைப்பாறிய அதிபர்
திரு. த. கனகரத்தினம் அதிபர்
திரு மு. செல்லப்பாக்கியம்
இளைப்பாறிய அதிபர்
டாக்டர் சி. மாசிலாமணி அவர்கள்
திரு. கே. எஸ். கந்தசாமி ஆசிரியர்

★ மலராசிரியர் உரை: திரு. மு. அநாதரட்சகன்

★ விழா நாயகன் உரை:

★ நன்றியுரை: திரு நா ஜெயராசசிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அல்வாய் வடக்கு,
அல்வாய். [28269] - விழாக்குழு.

---

யாழ். மிட்ரவுண்
றோட்டரக்ட் கழகம்
நடத்தும்

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

இடம் : யாழ். மத்திய கல்லூரி
காலம் : 4-12-1993 இன்று மாலை 3மணி

பாடுமீன் வி. க.
எதிர்
சென். நீக்கிலஸ் வி. க.

சென். மேரீஸ் வி. க.
எதிர்
அன்ரனீஸ் வி. க.

(சி-6643)

---

## எம் இதய அஞ்சலிகள்

### திரு எல். ஆர். முத்தையா

(தலைவர் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு உதவித்திட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பு செயற்குழு)

எங்கள் இணைப்புக் குழுவின் தலைவராக ஆரம்ப காலம் தொட்டு பணிபுரிந்த அமரர் எல். ஆர். முத்தையா பெருந்தகையின் இழப்பு ஈடு செய்ய முடியாது. அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜேர்மன் சமஷ்டிக்குடியரசு-
உதவித் திட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்புச செயற்குழு
(சி/6641) யாழ். மாவட்டம்

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் உயர்திரு L. R. முத்தையா

இன்று யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி முழு ஈழத்திலும் கூட மிகப்பெரியதொரு விருட்சமாகப் பரந்து விரிந்து மனிதநேய செயல்களுக்கமைய அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் (1983) உபதலைவராக பல்லாண்டுகள் அரும்பெரும் சேவையாற்றி ஆயிரக் கணக்கான அகதிகளின் இன்னல்களை மனப்பூர்வமாக தீர்த்த அமரர் உயர்திரு L. R. முத்தையா அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை இதயபூர்வமாகத் தெரிவிக்கிறோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983,
374, பருத்தித்துறை வீதி,
(28270) நல்லூர், யாழ்ப்பாணம்.

---

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ். லயன்ஸ் கழகத் தலைவரும், தற்போதைய மாவட்ட லியோ கழகங்களின் தலைவரும், பிரபல சமூகசேவையாளருமாகிய

### லயன் எல். ஆர். முத்தையாவின்

இயற்கை மரணம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது கழக சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

—நல்லூர் லயன்ஸ் கழகம்.

(28279)

---

## ஈராண்டு இதய அஞ்சலி

தோற்றம்: 07 — 07 — 1916



மறைவு: 04 — 12 — 1991

### அமரர் நல்லதம்பி தம்பிஐயா

புங்குடுதீவு - 3
(முன்னாள் லிகிதர், L. D. D )

நினையாத நேரம் நிமலனடி சேர்ந்து
ஈராண்டு ஓடிமறைந்தாலும் எம்துயரம்
நீங்காது உள்ளம் நினைந்து நினைந் தேங்குதையா
தங்கள் ஆசியும், அறிவுரையும் எம்மை
வழிநடத்திச் செல்லுமப்பா!

தங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

50, புநூாடி [illegible],
யாழ்ப்பா[illegible] [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## யாழ் வாசிகள் இருவர் கைது

தாண்டிக்குளம் இராணுவச் சோதனை நிலையத்தில் வைத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 19 வயது பிரிவுக்கான இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

3 ஆம் இடத்துக்கான போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து மகாஜனா கல்லூரி மோதும்

இறுதிப் போட்டியில் — மேஜர் முரளி நினைவுச் சுற்றுக் கிண்ணத்துக்கான போட்டியில்— ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து புனித கென்றியரசர் கல்லூரி மோதும்.

இப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் கலந்து கொள்வார். (இ-3)

★ ★ ★

யாழ். மிட்ர்வுண் றோட்டரக்ட் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:-

★ பாடு மீன் அணி எதிர் சென். நிக்கலஸ் வி க. அணி.

★ சென். மேரீஸ் அணி எதிர் அன்ரனீஸ் வி.க. அணி. (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 4

யாழ் ப நோ.கூ.ச. விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கிடையிலான மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ 3.00 மணி — சுன்னாகம் எதிர் நெல்லியடி.

★ 4,00 — யாழ்ப்பாணம் எதிர் உடுப்பிட்டி (இ-3)

---

சூறாவளி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலைகள் எழும்பக் கூடும் என்றும் —

மணிக்கு நூறு முதல் 120 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என்றும்—எச்சரிக்கப்பட்டுள்ளது. (இ-எ-5)

---

நல்லை ஆதீனந்...
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைவமக்களின் தவப்பேறாகும். சிறப்பாக இவர்களின் காசியாத்திரையும் கங்கை நீராடலும், திரிவேணி சங்கம ஸ்நானமும் சைவ மக்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய புனிதப் பணியாகும்.

சுவாமிகள் தமிழ்நாட்டு ஆதீனங்களையும், ஆதீன முதல்வர்களையும் தரிசித்தமை பெரியதொரு அருள் நிகழ்வாகும். தமிழ் ஈழத்தின் ஒரே ஒரு ஆதீனமாக விளங்கும் பெருமை பெற்ற இவ்வாதீனத்தை வளர்க்க வேண்டியதும் வளம் பெறச் செய்ய வேண்டியதும் சைவ மக்களின் கடமையாகும். திருத்தொண்டர்களை உருவாக்கல், சைவத்துறையில் ஆழ்ந்த அறிவுடையோரை உருவாக்கல் ஆகிய இரண்டு பணிகள் மிகவும் இன்றியமையாதது.

வெறுமனே சமய மகாநாடுகளோ அல்லது மற்றும் ஆரவார நிகழ்ச்சிகளோ நடத்துவதால் பயன் ஏற்படாது. இப்போதைய மகாநாடுகள் எல்லாம் அறிவை வளர்ப்பதை விடுத்து, ஆரவாரத்தை வளர்க்கின்றன. சமய மகாநாடுகள் எல்லாம் உணவு மகாநாடுகளாக மாறுகின்றன. சோம்பேறிக் கூட்டம் ஒன்று இம்மகாநாட்டில் பங்குபற்றி இடத்தை நிரப்புகிறது.

ஆதீனங்கள் தான் எமது சைவத்தின் தலைமைப் பீடங்கள். எனவே எதிர்காலத்தில், இவற்றைக் கருத்தில் வைத்து சைவப்பற்றும், தியாக சிந்தனையும், உறைப்பான திருத்தொண்டும் இணைந்து நல்லை ஆதீனம் மிளிரவும், இன்றைய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் இவற்றின் காவலராகப் பல்லாண்டு காலம் அருளாட்சி நடத்தவும் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

---

## அரசுக்கு எதிராக தொண்டா போர்க்கொடி தூக்கியதுஏன்?

### பேரினவாதப் போக்கே காரணமாம்

கொழும்பு, டிச. 4

அரசாங்கத்தில் சிங்களப் பேரினவாதப் போக்கு தலையெடுத்து உள்ளதை அவதானித்த பின்னர் தான் அமைச்சர் தொண்டமான் ஐ. தே. க. அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருப்பதாக சண்டேரைம்ஸ் தெரிவிக்கின்றது.

மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினை பற்றிய விஜேதுங்க அரசின் அணுகுமுறை குறித்து தொண்டமான் கவலையடைந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

---

## மரண அறிவித்தல்கள்

### லயன், L. றேமன் முத்தையா

கரம்பனூரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 67/1, கோவில் வீதியில் வசித்தவரும் முன்னாள் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரும், பொது நல சேவைகளில் பணியாற்றி வருபவருமாகிய லயன். L. றேமன் முத்தையா அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் நவமணியின் அன்புக் கணவரும், குமார், காந்தி, மகேந்திரன், டாக்டர் கமேல், குமுதினி மரியநாயகம், டாக்டர் கிருஷ்ணி சிறீபதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நவமணி முத்தையா
(மனைவி)

67/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (28296)

### திருமதி சிவகுமாரன் மல்லிகாதேவி

குப்பிளானைச் சேர்ந்தவரும் தற்பொழுது மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய திருமதி சி. மல்லிகாதேவி காலமாகிவிட்டார்.

அன்னார் சி. சிவகுமாரன் (அதிபர் புன்னாலைக் கட்டுவன் அ. த. க. பா.) அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தனின் (மாணவர் ஆண்டு 7 கொக்குவில் இந்துக் கல்லூரி) தாயாரும், காலஞ்சென்ற ஆறுமுகம் — கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற தருமலிங்கம் (ஆசிரியர்), மகாலிங்கம் (உதவி அரச அதிபர் நல்லூர்), தவமணிதேவி (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலை), உருத்திரலிங்கம் (கனடா), ஸ்ரீஸ்கந்தவேல் (சுவிஸ்), புத்திரசிகாமணி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், சின்னத்துரை (கணேசா ஸ்ரோர்ஸ் கொழும்பு 11)— செல்லம்மாவின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை (04 – 12 – 93) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவகுமாரன்
(கணவர்)

38/15 மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம். (28285)

### திருமதி நாகம்மா கந்தையா

கச்சாய் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி நாகம்மா கந்தையா அவர்கள் 03-12-93 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற திரியாய் அம்மன் ரான்ஸ்போட் உரிமையாளரும் - அரச கட்டட ஒப்பந்தகாரருமான மு. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி. சிற்றம்பலம் தங்கரத்தினம் (ஆவரங்கால், மல்லிகா ஸ்ரோர்ஸ்), காலஞ் சென்ற க. சண்முகராசா (ஆவரங்கால் அருணா ரான்ஸ்போட்), க. அமிர்தலிங்கம் (சாவகச்சேரி திரியாய் அம்மன் ரான்ஸ்போட்), திருமதி க. யோகாம்பிகை, க. பத்மநாதன் (கனடா), திருமதி இ. கமலாதேவி, திருமதி ம. பாமா (இயக்கச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் (ஆவரங்கால்), திருமதி ச. இராசேஸ்வரி (லண்டன்), திருமதி அ புவனேஸ்வரி எஸ். பி. கணபதிப்பிள்ளை (புறக்கொன்ட்), திருமதி ப. செல்வநாயகி (கனடா), இராசதுரை, மகேந்திரன் (இயக்கச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (3-12-93) வெள்ளிக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்

தகவல்:
எஸ். பி. கணபதிப்பிள்ளை
(மருமகன்)

1 ஆம் கட்டை
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (28375)

### முத்துத்தம்பி தருமலிங்கம்

முத்துத்தம்பி தருமலிங்கம் (பிரபல புகையிலை வியாபாரியும், பிள்ளையார் ஸ்ரோர் உரிமையாளரும்) 3 – 12 – 93 அன்று காலமானார். அன்னார் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், அருளம்பலம், பஞ்சநாதன், அப்பாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற சிதம்பரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன், திருச்செல்வம், முத்துராஜா, பாஸ்கரன், செல்வராணி, தருமராணி, மகாராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவலோகநாதன் (சுன்னாகம் M. P. C. S.), வரதராஜா (கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்), யோகராணி, விஜயலட்சுமி, கௌரி ஆகியோரின் மாமனாரும், மயூரி, மாதுரி, நிரோஜன், மிதுலா, சயந்தன், மகாசேனன், காயத்திரி, தனபோதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியை இன்று பி. ப. 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த பாலச்சந்திரன்
(மகன்)

அங்கிலிப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில். (28287)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.